# ஏசுவே என்னுடன் நீ பேசு

ஏசுவே என்னுடன் நீ பேசு
என் இதயம் கூறுவதை கேளு
நானொரு பாவி ஆறுதல் நீ கூறு
நாள் முழுதும் என்னை வழிநடத்து (2)

உன் திருப்பெயர் நான் பாடிடும் கீதம்
உன் திரு இதயம் பேரானந்தம் (2)
உன் திரு வாழ்வெமக்கருளும் இறைவா  இறைவா
உன் திரு வாழ்வெமக்கருளும்
உன் திரு நிழலில் நான் குடிகொள்ள
என்றும் என்னுடன் இருப்பாய்

ஏசுவே என்னுடன் நீ பேசு
என் இதயம் கூறுவதை கேளு
நானொரு பாவி ஆறுதல் நீ கூறு
நாள் முழுதும் என்னை வழிநடத்து

இயேசுவின் பெயருக்கு மூவுலகென்றும்
இறையடி பணிந்து தலை வணங்கிடுமே (2)
ஏசுவே உன் புகழ் வாழ்க வாழ்க வாழ்க
ஏசுவே உன் புகழ் வாழ்க
ஏசுவே நீர் என் இதயத்தின் வேந்தன்
என்னை தள்ளி விடாதே

ஏசுவே என்னுடன் நீ பேசு
என் இதயம் கூறுவதை கேளு
நானொரு பாவி ஆறுதல் நீ கூறு
நாள் முழுதும் என்னை வழிநடத்து